# லங்கா போஸ்பேட் லிமிடட்
# வருடாந்த அறிக்கை 2019/20

கைத்தொழில்கள் அமைச்சு

## <u>தூர நோக்கு</u>

*“எப்பாவல போஸ்பேட் வைப்பின் உச்ச பயன்பாட்டுடன் பாஸ்பரஸ் ஊட்டச்சத்தினை வழங்குவதன் மூலம் எமது தாய் நாட்டின் மண் உரத்தை வளமாக்குதல் ”*






## <u>பணிநோக்கு</u>

*“ சூழல் நட்பு மற்றும் கலைநுட்ப செயன்முறை ஊடாக பாஸ்பரஸில் தன்னிறைவு கொண்டிருப்பதன் மூலம் போஸ்பேட் உரத்துக்கான தேசிய தேவைப்பாட்டை நிறைவுசெய்தல் ”*

## உள்ளடக்கம்


- பணிப்பாளர் சபை 01
- அறிமுகம் 02
- நிதிசார் சிறப்பம்சங்கள் 03
- தலைவரின் கூற்று 04-05
- நிறுவனக் கட்டமைப்பு 06
- அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை 07
- முகாமைத்துவக் குழு 08-09
- பணிப்பாளர்களின் கூற்று 10-13
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபையின் அறிக்கை 14
- கணக்காய்வாளர்களின் அறிக்கை 15-19

<u>கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள்</u>

  - காலப்பகுதிக்கான விரிவான வருமான கூற்று 20
  - 31.03.2020ற்கான நிதி நிலைக் கூற்று 21
  - காலப்பகுதிக்கான உரிமையாண்மையில் மாற்றங்களின் கூற்று 22
  - காலப்பகுதிக்கான பணப் பாய்ச்சல் கூற்று 23
  - பெருநிறுவன தகவல்கள், குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் 24-44

- நடவடிக்கைகள் பற்றிய மீளாய்வு 45-47
- கூட்டம் பற்றிய அறிவித்தல் 48
- பிரதிநிதித்துவ முறை 49

## *பணிப்பாளர் சபை*



பொறி. ஆனில் ரணசிங்ஹ
தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்



திரு. என்.எம்.எஸ். கருணாதாச
பணிப்பாளர்



திரு. ஏ.பி. மொரகொட
பணிப்பாளர்



திரு. டீ.ஆர்.டி, ருவண்புர
பணிப்பாளர்



திரு. எஸ். அபேவர்தன
பணிப்பாளர்



திரு. ஜே.ஏ.டப்ளியு. ஜயசூரிய
பணிப்பாளர்

## *அறிமுகம்*

**கம்பனி பெயர்**

லங்கா போஸ்பேட் லிமிடட்.

**உறைவிடமும் சட்ட அமைப்பும்**

லங்கா போஸ்பேட் லிமிடட் ஆனது அரச நில அகழ்வு மற்றும் கனிம அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் திட்டத்தை கையகப்படுத்துவதற்காக பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை 1987ம் ஆண்டு 23ம் இலக்க சட்டத்தின் படி பொது கம்பனிகளாக மாற்றுதல் என்ற அடிப்படையில் 1982 17ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1992 ஜுலை 10ந் திகதி வரையறுக்கப்பட்ட பொறுப்புடமை கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதனைத் தொடர்ந்து 2007 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தன்னை மீள பதிவுசெய்து கொண்டது.

**பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை**

கம்பனியின் பிரதான செயற்பாடுகளாவன நிலையான விவசாய பயிர்களுக்கு ஒரு உரமாகப் பயன்படுத்தப்படும் ரொக் போஸ்பேட்டினை அகழ்தல், செயற்படுத்தல மற்றும் விற்பனை செய்வதாகும்.

**பதிவு இல.**

PB 308

**பணிப்பாளர் சபை**

| | |
|---|---|
| பொறி. அனில் ரணசிங்ஹ - | தலைவர் |
| திரு. என்.எம்.எஸ் கருணாதாச- | பணிப்பாளர் |
| திரு. ஏ.பி. மொரகொட- | பணிப்பாளர் |
| திரு. டீ.ஆர்.டி, ருவன்புர – | பணிப்பாளர் |
| திரு. ஜே,ஏ.டப்ளியு. ஜயசூரிய- | பணிப்பாளர் |
| திரு. சுதத் அபேவர்த- | பணிப்பாளர் |

**கம்பனி செயலாளர்**

நிதிச் சேவைகள் மற்றும் வர்த்தக முகவர்கள் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம். இல. 300.'.3,நாவல வீதி, நாவல.

**தாய்க் கம்பனி**

கம்பனியின் வெளியிடப்பட்ட பங்குகள் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திரைசேரிக்கான செயலாளரினால் முழுமையாக உரித்தாக்கப்பட்டுள்ளது.

**தொடர்புபட்ட அமைச்சு**

கைத்தொழில்கள் அமைச்சு
த.பெ. இல. 570
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு 03.

**பதிவுசெய்யப்பட்ட காரியாலயம்**

73 1/1, புதிய களனிப் பாலம் வீதி,
கொழும்பு 14.
தொலைபேசி: 94112459906/7
பெக்ஸ்: 94112459908

**கணக்காயர்வாளர்கள்**

கணக்காய்வாளர் நாயகம்
தேசிய கணக்காய்வு காரியாலயம்
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**வரி ஆலோசகர்கள்**

அமரசேகர மற்றும் கம்பனி
பட்டய கணக்காளர்கள்
12, ரொடுண்டா காடன்,
கொழும்பு 03.

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி
தேசிய சேமிப்பு வங்கி
மக்கள் வங்கி

## *நிதிசார் சிறப்பம்சங்கள்*

**<u>வருடத்திற்கு</u>** **(ரூபா. '000)**

| | **2019/20** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** |
|---|---|---|---|---|---|
| இறைவரி | 510,004 | 530,975 | 493,551 | 366,094 | 562,735 |
| வருடத்திற்கான தேறி இலாபம்/ (நட்டம்) | 9,786 | 33,960 | 3,220 | (10,534) | 26,587 |
| மொத்த பரந்த வருமானம் | 23,118 | 109,726 | (4,475) | (14,577) | 29,578 |

**<u>வருட முடிவின் போது</u>** **(ரூபா. '000)**

| | **2019/20** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** |
|---|---|---|---|---|---|
| பங்குதாரர்களின் நிதி | 787,765 | 771,646 | 669,834 | 740,738 | 760,315 |
| தொழிற்படும் மூலதனம் | 527,750 | 480,273 | 419,904 | 442,665 | 451,108 |
| மொத்த சொத்துகள் | 905,035 | 892,603 | 757,572 | 836,113 | 860,451 |
| ஊழியர் செலவு | 303,310 | 292,861 | 230,782 | 224,678 | 236,020 |
| தொழிலாளர் எண்ணிக்கை (இல) | 333 | 328 | 333 | 335 | 347 |

**<u>பங்கு வீதம்</u>**

| | **2019/20** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** |
|---|---|---|---|---|---|
| வருமானம் (ரூபா.) | 3.19 | 15.13 | (0.62) | (2.01) | 4.08 |
| தேறிய சொத்துகள் (ரூபா.) | 108.64 | 106.42 | 92.38 | 102.16 | 104.86 |

**<u>வீதங்கள்</u>**

| | **2019/20** | **2018/19** | **2017/18** | **2016/17** | **2015/16** |
|---|---|---|---|---|---|
| நடைமுறை வீதம் (தடவைகள்) | 14.54 | 12.75 | 11.09 | 7.90 | 7.41 |
| பங்குதாரர்களின் நிதிக்கான மீள்வருகை (%) | 2.93% | 14.22% | -0.67% | -1.97% | 3.89% |

## தலைவரின் அறிக்கை



ரோக் போஸ்பேட் விவசாயம் மற்றும் பிற கைத்தொழில்களில் பல்வேறுபட்ட பயன்பாடுகள் மற்றும் பிரயோகங்களோடு ஒரு முக்கியமான கனிய மூலமாகும். போஸ்பட் தாவர வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தேவைப்படும் அவசியமான ஒரு ஊட்டச்சத்தாகும். உலகளாவிய போஸ்பேட் நுகர்வு உரக் கைத்தொழிலிருந்து துப்பறவு செய்யும் பொருட்களின் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் மற்றும் பல இதர கைத்தொழில்கள் வரை வேறுபட்டிருக்கின்றது. உலக சந்தையில் ரொக் போஸ்பேட் இரசாயன போஸ்பேட் உரத்துக்கான ஒரு “இயற்கையான மாற்று” ஆக ஏற்றுக்கொள்ளப்பட்டு சந்தைப்படுத்தப்படுகின்றது. அது மிகவும் இயற்கைதன்மை வாய்ந்ததது, நிலைபேறானது என அறியப்படுகிறது.

உலக போஸ்பேட் இருப்புகள் மட்டுப்படுத்தப்பட்டனவும் புதுப்பிக்க முடியாதவனவும் ஆகும். ஆகையால், தாக்ககரமான, அனுகூலமான மற்றும் நிலைபேறான அகழ்வு செயன்முறைகளோடு பயன்படுத்த வேண்டும். எப்பாவல போஸ்பேட் வைப்பானது $P_2O_5$ இன் 33-40% உடன் இலங்கையில் உள்ள பெறுமதிமிக்க இயற்கையான போஸ்பேட் இருப்பாகும். உலகிலுள்ள வளமிக்க மற்றும் தனித்துவமான போஸ்பேட் வைப்புகளில் ஒன்றாக காணப்படுகிறது. எப்பாவல போஸ்பேட் வைப்பு 1971ல் கண்டுபிடிக்கப்பட்டது. 60 மில்லியன் மெடரிக் தொன் போஸ்பேட் உள்ளடங்கியருப்பதாக கணிப்பீடுகள் காண்பிக்கின்றன. ரொக் போஸ்பெட் உரமானது நாட்டில் உள்ளூர் போஸ்பேட் உரத் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக அகழ்வு மற்றும் செயன்முறைப்படுத்தலூடாக வரையறுக்கப்பட்ட லங்கா போஸ்பட் (LPL) மூலம் தயாரிக்கப்படுகிறது. தற்போதைய கொள்ளலவுடன் LPL உள்ளூர் தேவைக்காக வருடாந்தம் 50,000 மெட்ரிக் தொன் அளவு எப்பாவல ரொக் போஸ்பட் (ERP) ஐ உற்பத்தி செய்கிறது. தனியார் மற்றும் பொது உரக் கம்பனிகள் ஊடாக விசவாயிகளை சென்றடைகிறது. தற்போது LPL நாட்டில் நிலையான பயிர்களுக்கான போஸ்பேட் உரமாக பாவிக்கப்படும் எப்பாவல ரொக் போஸ்பேட் (ERP) மற்றும் உயர் தர எப்பாவல ரொக் போஸ்பேட் (HERP) என்ற பெயரில் இரு வகையான ரொக் போஸ்பட் உரங்களை உற்பத்தி செய்கிறது. மேலும், LPL 2014 முதல் தென்னை உரக் கலவை தாவரத்தையும் செயற்படுத்தி வருகிறது.

லங்கா போஸ்பேட் லிமிடட் ஆனது அரச நில அகழ்வு மற்றும் கனிம அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் திட்டத்தை கையகப்படுத்துவதற்காக பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை 1987ம் ஆண்டு 23ம் இலக்க சட்டத்தின் படி பொது கம்பனிகளாக மாற்றுதல் என்ற அடிப்படையில் 1982 17ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1992 ஜூலை 10ந் திகதி வரையறுக்கப்பட்ட பொறுப்புடமை கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. அது இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திரைசேரிக்கான செயலாளரினால் முழுமையாக உடமையாக்கப்பட்டுள்ளது. LPL 1998 நவம்பர் மாதம் போகல கிரபைட் லிமிடட்டிலிருந்து வேறாகி முழுமைாக சுயாதீன அமைப்பாக உள்ளது.

வளர்ச்சியடைந்த விவசாய அபிவிருத்தியின் ஊடாக ஆரோக்கியமான, உற்பத்தித் திறன் வாய்ந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் கொள்கை திட்டமான “ சுபீட்சம் மற்றும் பிரகாசத்திற்கான பார்வைகள்” என்பதற்கு அமைவாக, LPL நாட்டில் உரம் உற்பத்தி கைத்தொழிற் துறையில் முன்னணியான, அவசியமான ஒரு பங்களிப்பை வழங்க

வேண்டியுள்ளது. டீடு இன் வரலாற்றில் அண்மைய சாதனையாக ERP ஐ விவசாயிகள் நேரடியாக பெற்றுக்கொள்வதை மற்றும் பெயரளிவலான விலையில் உரக் கலவைகளை பெற்றுக்கொள்வதை அதிகரிக்கவும் அதன் சொந்த வியாபார நாமமான ''எப்பாவல பொஹர'' என்பதை அறிமுகப்படுத்தியதாகும். கம்பனி தற்போது கைத்தொழில் துறையில் முன்னணி வகிபாகத்தை அடைவதற்காக அதிகளவு தொழிநுட்ப முன்னேற்றம் மற்றும் உற்பத்தி வளர்ச்சியில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

2019/2020 நிதியாண்டில் ரூபா 510 மில்லியன் மொத்த புறழ்வை சாதிப்பதோடு முடிவடைந்தது. இது கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது ஒரு சாதகமான அதிகரிப்பாகும். லங்கா போஸ்பேட் லிமிடட் எப்பாவல ரொக் போஸ்பேட்டில் (ERP) 35,171.75 மெட்ரிக் தொன், உயர் தர எப்பாவல ரொக் போஸ்பேட்டில் (HERP) 8,689.65 மெடரிக் தொன், தென்னை உரத்தில் 567.24 என்ற விற்பனை மட்டத்தை அடைய முடியுமாக இருந்தது.

எப்பாவல போஸ்பேட் வைப்பை உச்சநிலையில் பயன்படுத்துவதற்காக தற்போதிருக்கும் அதே போல் புதிய வியாபார வாய்ப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக தீர்வுகளை செயற்படுத்துவதற்காக கம்பனி ஈடுபாடு கொண்டுள்ளது. நாட்டின் மொத்த தேவைப்பாட்டை நிவர்த்திசெய்வதற்காக குறுகிய கால பயிர்களுக்காக மிகவும் கரையத்தக்க வகையிலான போஸ்பேட் உரத்தின் முக்கியத்துவம் மற்றும் தேசிய தேவையை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆகையால், கைத்தொழிலில் அடுத்த உடனடி தேவைப்பாடாக உள்ளூர் SSP தயாரிப்பை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப கட்டங்களை கம்பனி ஏளவே ஆரம்பித்துவிட்டது.

ஒரு பொறுப்பான அரச நிறுவனம் என்ற வகையில் தமக்குரிய துறைகளில் புதிய அபிவிருத்திகளோடு பரிச்சயமாக்கிக்கொள்வதற்காக அனைத்து மட்டங்களிலும் அவசியமான திறன்களை விருத்தி செய்வதற்காக பெறுமதி சேர் உற்பத்திகள், மானிட சிநேகபூர்வ சூழல்கள் மற்றும் ஊழியர் பயிற்சி செயல்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு இணைந்து செயற்படுகின்றது.

முடிவாக, கம்பனியின் அனைத்து சாதனைகளுக்கும் அரசியல் தலைமைத்துவம், கைத்தொழில்கள் அமைச்சு, பொது திரைசேரி மற்றும் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டல், ஊக்கப்படுத்தல் மற்றும் ஒத்துழைப்பினை பெருமளவு பாராட்டுகிறேன்.

லங்கா போஸ்பெட் லிமிடட்டின் எதிர்கால முயற்சிகள் வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துகிறேன்.



பொறி. அனில் ரணசிங்ஹ
தலைவர்
லங்கா போஸ்பேட் லிமிடட்

# நிறுவனக் கட்டமைப்பு

லங்கா போஸ்பேட் லிமிடட்டின் நிறுவனக் கட்டமைப்பு (24.04.2015)



## அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை

| வகை | சம்பள குறியீடு | பதவி | பதவிநிலை எண்ணிக்கை |
|---|---|---|---|
| உயர்நிலை முகாமையாளர் | எச்எம்- 2-1 | பொது முகாமையாளர் | 01 |
| | எச்எம்- 1-3 | பிரதி பொது முகாமையாளர்- உற்பத்தி | 01 |
| | | பிரதி பொது முகாமையாளர்- உற்பத்தியின்மை | 01 |
| | எச்எம்- 1-1 | நிதி முகாமையாளர் | 01 |
| | | உற்பத்தி முகாமையாளர் | 01 |
| | | நடவடிக்கை முகாமையாளர் | 01 |
| | | நிர்வாகம் மற்றும் ம.வ. முகாமையாளர் | 01 |
| மத்திய முகாமையாளர் | எம்எம்- 1-1 | கணக்காளர் | 01 |
| | | தொழிநுட்ப முகாமையாளர் | 01 |
| | | உற்பத்தி பொறியியலாளர் | 01 |
| | | உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| | | உதவி விநியோக முகாமையாளர் | 01 |
| | | உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளர் | 01 |
| | | பாதுகாப்பு முகாமையாளர் | 01 |
| கனிஷ்ட முகாமையாளர் | ஜேஎம்-1- 1 | விநியோக அதிகாரி | 01 |
| | | நிர்வாக அதிகாரி (நிர்வாகம் மற்றும் ம.வ) | 01 |
| | | ஆலை அதிகாரி | 01 |
| | | களஞ்சியப்படுத்தல் அதிகாரி | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | எம்ஏ 2-1 | | 28 |
| | எம்ஏ 1-1 | | 30 |
| ஆரம்ப கட்டம் | பிஎல்– 3 | | 73 |
| | பிஎல்– 2 | | 80 |
| | பிஎல்– 1 | | 120 |
| **மொத்தம்** | | | **349** |

## *முகாமைத்துவக் குழு*



திரு. எச்.ஆர்.யு.டீ. பண்டார
பொது முகாமையாளர்



திரு. டி.ஜி.யு. சாமர
நிதி முகாமையாளர்



திரு. எஸ்.டி. ரூபசிங்ஹ
நடவடிக்கை முகாமைளார்



கப்டன் கே.ஜி.ஆர்.பி. கிரியெல்ல
பாதுகாப்பு முகாமயாளர்



திரு. டி,ஆர்.கே. திலகரத்ன
கணக்காளர்



திரு.ஆர்.எ.எ.பி. ரணசிங்ஹ
சந்தைப்படுத்தல் நிர்வாகி



திரு. எச்.எ.டி. ஜயானந்த
தொழிநுட்ப பொறியியலாளர்



திரு. டி.பீ. கீரியவத்த
உள்ளக கணக்காய்வாளர்



திரு. எல்.எல்.டி.ஐ. பெதும்
உற்பத்தி பொறியியலாளர்



திரு. எஸ்.எ. அபேசிரி
விநியோக அதிகாரி



திரு. எஸ்.எம்.எ.ஆர்.கே. மஞ்சநாயக
பணியாளர் அதிகாரி (நிர் மற்றும் ம.வ)



திரு. டீ.ஆர். குணரத்ன
ஆலை அதிகாரி



திரு. ஆர்.எம். மத்துமபண்டார
விநியோக அதிகாரி



திரு. டீ.எஸ்.எம். திசாநாயக்க
களஞ்சியப்படுத்தல் அதிகாரி

## *பணிப்பாளர்களின் அறிக்கை*

லங்கா போஸ்பேட் லிமிடட்டின் பணிப்பாளர்கள் (கம்பனி) 2020 மார்ச் 31ந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் வருட அறிக்கை இத்தால் சமர்ப்பிக்கின்றது.

**1.0 கம்பனியின் பெயர்**

லங்கா போஸ்பேட் லிமிட்ட (பதிவு இல. PB 308)

**2.0 உறைவிடமும் சட்ட அமைப்பும்**

லங்கா போஸ்பேட் லிமிடட் ஆனது அரச நில அகழ்வு மற்றும் கனிம அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் திட்டத்தை கையகப்படுத்துவதற்காக பொதுக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை 1987ம் ஆண்டு 23ம் இலக்க சட்டத்தின் படி பொது கம்பனிகளாக மாற்றுதல் என்ற அடிப்படையில் 1982 17ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1992 ஜூலை 10ந் திகதி வரையறுக்கப்பட்ட பொறுப்புடமை கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும், அதனைத் தொடர்ந்து 2007 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தன்னை மீள பதிவுசெய்து கொண்டது.

**3.0 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கையின் இயல்பு**

கம்பனியின் பிரதான செயற்பாடுகளாவன: கற்பாரை போஸ்பெட்டை அகழ்வு செய்தல், செயற்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் அத்துடன் நிலையான விவசாய பயிர்களுக்கான உரமாக பயன்படுத்தப்படும் தெங்கு உரத்தை கலவை செய்தல். .

**4.0 நிதிக் கூற்று**

இருப்பு நிலைக் குறிப்பு தினத்திற்கு இத்தால் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கம்பனியின் விவகாரங்கள் குறித்து உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை தருகின்றது என்பதில் பணிப்பாளர்கள் திருப்திகொள்கின்றனர். குமிடத்து

இவ்வாறான நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது பொருத்தமான கணிப்பீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை பணிப்பாளர்கள் கருத்திற்கொள்கின்றனர். அவை தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படும் மற்றும் நியாயமான, கவனமான தீர்ப்பு மற்றும் மதிப்பீடுகள் மூலம் பலப்படுத்தப்பட்டவையாகும். அவர்கள் இந்த அறிக்கையில் வெளிப்படுத்துதலை உத்தரவாதப்படுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர். கம்பனியின் சொத்துக்களை பாதுகாக்கவும், ஊழல் மற்றும் மோசடிகளை தடுக்கவும் கண்டுபிடிக்கவும் பொறுப்பானவர்கள் என்ற வகையில் பணிப்பாளர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

**5.0 நிதி அறிக்கைகளும் கணக்கீட்டுக் கொள்கைகளும்**

இவ்வாறான நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படும் பொருத்தமான கணிப்பீட்டு கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன என்பதையும்

அதேநேரம் நியாயமான, கவனமான தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் பணிப்பாளர்கள் கருத்திற்கொள்கின்றனர். எனவே, கொடுக்கல் வாங்கலின் அமைப்பும் சாரமும் முறையாக பிரதிபலிக்கின்றன. கணக்கீட்டுக் காலப்பகுதிக்குள் கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

### 6.0 சொத்து, ஆலை மற்றும் சாதனம் அவற்றின் பெறுமதி மதிப்பீடும், பெறுமானத் தேய்வும்

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சொத்து, ஆலை மற்றும் சாதனத்தில் கம்பனியால் ஏற்படுத்தப்பட்ட மூலதன செலவு ரூபா 4,380,431,00 ஆகும். சொத்து, ஆலை மற்றும் சாதனம் என்பவற்றின் நிலை மற்றும் அசைவுகள், அவற்றின் பெறுமதி மதிப்பீடு மற்றும் பெறுமானத் தேய்வு விபரங்கள் நிதிக் கூற்றுகளின் குறிப்பு 5.0 மற்றும் 26 இல் வழங்கப்பட்டுள்ளன.

### 7.0 வரி விதிப்பு

மீளாய்வின் கீழ் வருடத்திற்கான வரி வருமானத்தில் 28% வரிக்கு கம்பனி உட்படுத்தப்பட்டுள்ளது.

### 8.0 பங்கு இலாபங்கள்

மீளாய்வின் கீழ் வருடத்திற்கான பங்கு இலாபங்கள் பிரகடனப்படுத்தப்படவில்லை.

### 9.0 குறித்த மூலதனம்

ரூபா 7,251,000/- சாதாரண பங்குகள் உள்ளடங்கலாக கம்பனியின் குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூபா 72,510,000/- ஆகும். மீளாய்வின் கீழ் குறிப்பிடப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் காணப்படவில்லை.

### 10.0 பங்குகளை வைத்திருத்தல்

1987ம் ஆண்டு 23ம் இலக்க பொது கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் பிரிவு 2(3) பிரகாரம் ஏக பங்குதாரர் கம்பனியாகும். அது அரசின் சார்பாக திறைசேரிக்கான செயலாளராகும் (அவரின் உத்தியோகபூர் பதவியில்).

2020 மார்ச் 31ந் திகதி வரை கம்பனியின் பங்குதாரர் விபரங்கள் பின்வருமாறு:
திறைசேரிக்கான செயலாளர் (அவரின் உத்தியோகபூர்வ பதவியில்) 7,251,000 சாதாரண பங்குகள்.
லங்கா போஸ்பேட் லிமிடட் GSMB தொழிநுட்ப சேவைகள் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் ஒரு பங்குதாரர். அது 100,000 சாதாரண பங்குகளை கொண்டிருக்கின்றது. (ஒவ்வொன்றும் ரூபா. 10/- ஆகும்)
குறிப்பிடப்பட்ட பங்கின் சதவீதம் 16.66% ஆகும்.

### 11.0 பங்கு வைத்திருப்பதில் மாற்றங்கள்

31.03.2020 வரை கம்பனியின் பங்கு வைத்திருப்பதில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை.

### 12.0 இணைந்த சமூக பொறுப்புகள்

மீளாய்வின் கீழ் குறித்த வருடத்திற்குள் கம்பனி தொண்டு நோக்கங்களுக்கும் மற்றும் CSR நோக்கங்களுக்கும் ரூபா 120,497.06 ஐ பங்களிப்புச் செய்துள்ளது.

### 13.0 தொழிலாளர்கள்

குறித்த வருடத்திற்குள் பணியாளர்களுக்கான மொத்த செலவு ரூபா 303,310,428.00 ஆகும்.

வருட முடிவின் போது கம்பனியால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பணியாளர்களின் சராசரி எண்ணிக்கை 324 ஆகும்.

.

### 14.0 பணிப்பாளர்கள்

மீளாய்வின் கீழ் குறித்த வருடத்திற்குள் பின்வருவோர் பணிப்பாளர்களாக பதவி வகித்திருந்தனர்.

பொறி. அனில் ரணசிங்ஹ- தலைவர்
திரு. என்.எம்.எஸ். கருணாதாச- பணிப்பாளர்
திரு.ஏ.பி.மொரகொட- பணிப்பாளர்
திரு. டீ.ஆர்.டி. ருவன்புர- பணிப்பாளர்
திரு.ஜே.ஏ.டப்ளியு. ஜயசூரிய- பணிப்பாளர்
திரு. சுதத் அபேவர்தன- பணிப்பாளர்

### 15.0 பதவி விலகலும் பணிப்பாளர்களின் நியமனமும்

திரு. எச்.எம். கருணாரத்ன ஹேரத்- தலைவர் (15.01.2020), திரு. டீ.யூ. ஜயவர்தன- நிறைவேற்றுப் பணிப்பாளர் (15.01.2020), திருமதி. டீ.எச்.எஸ். புள்ளேபெரும- பணிப்பாளர் (15.01.2020), திருமதி. பி.எச். ஹந்துன்ஹேவா- பணிப்பாளர் (15.01.2020), திரு. ஜே.எஸ். புரணகம- பணிப்பாளர் (15.01.2020), திரு. ஜே.பி.யூ.எஸ். டீ சில்வா- பணிப்பாளர் (15.01.2020) ஆகியோர் குறித்த வருடத்தில் பதவி விலகினர். பொறி. அனில் ரணசிங்ஹ- தலைவர் (15.01.2020), திரு. டீ.ஆர்.டி. ருவன்புர- பணிப்பாளர் (15.01.2020), திரு. ஜே.ஏ.டிப்ளியு. ஜயசூரிய- பணிப்பாளர் (15.01.2020), திரு. என்.எம்..எஸ். கருணாதாச- பணிப்பாளர் (05.02.2020), திரு. ஏ.பி. மொரகொட- பணிப்பாளர் (05.02.2020), திரு. சுதத் அபேவர்தன- பணிப்பாளர் (05.02.2020) ஆகியோர் 2019/20 காலப்பகுதிக்கு புதிதாக நியமிக்கப்பட்டனர்.

### 16.0 பணிப்பாளர்களுக்கான ஊதியம்

மீளாய்வின் கீழ் பணிப்பாளர்களின் ஊதியம், கட்டணங்கள், செலவுகளாக ரூபா. 2,515,683.85 வழங்கப்பட்டது.

### 17.0 நியதிக் கொடுப்பனவுகள்

அரசாங்கம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு செலுத்த வேண்டிய அனைத்து சட்டபூர்வமான கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் முறையாக வழங்கப்பட்டுள்ளன பணிப்பாளர்கள் தமது அறிவு, நம்பிக்கை படி திருப்திகொள்கின்றனர்.

### 18.0 இணக்கப்பாடு

கம்பனி இலங்கையில் அல்லது வேறு இடத்தில் அமுலிலுள்ள சட்டதிட்டங்களை மீறுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லை.

### 19.0 தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

கம்பனி எதிர்காலத்தில் தனது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு போதுமான வளங்களை கொண்டிருக்கின்றது என்பதில் பணிப்பாளர்கள் திருப்திகொள்கின்றர். அதன்படி கம்பனியின் அனைத்து நிதி அறிக்கைகளும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள.

### 20.0 பெருநிறுவன ஆளுகை

பணிப்பாளர் சபை சிறந்த பெருநிறுவன ஆளுகையை உறுதிசெய்கின்றது. ஒரு பொது நிறுவனம் என்ற வகையில் செயலாற்றுகை கம்பனியின் நோக்கங்களோடும் அதேவேளை நிரந்தரப பங்குதாரர்களின் நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு இணக்கமாக உள்ளன என உறுதிசெய்வது பணிப்பாளர் சபையின் கடமையாகும்.

**21.0 <u>இடர் முகாமைத்துவம்</u>**

சட்டரீதியான பாதிப்புக்கு உள்ளாகுவது நீக்கப்பட்டுள்ளது அல்லது குறைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த நியதி மற்றும் சட்டரீதியான தேவைப்பாட்டை கம்பனி மனச்சாட்சியுடன் நிறைவேற்றுகின்றது.

**22.0 <u>கணக்காய்வாளர்கள்</u>**

அரசாங்க கணக்காய்வாளர்கள் கம்பனியின் தற்போதைய கணக்காய்வாளர்களாவர். .

லங்கா போஸ்பேட் லிமிடட்டின் பணிப்பாளர்கள் 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட செயன்முறைக்கு அமைவாக கொழும்பு 14, புதிய களனி பாலம் வீதி, இல. 73 1/1, லங்கா போஸ்பெட் லிமிடட் தலைமைக் காரியாலயத்தில் 2020.09.30ந் திகதி நடைபெறவுள்ள வருடாந்த பொதுக் கூட்டத்தில் 2020/21 வருடத்திற்கான கணக்காய்வாளர்களை நியமிக்க கம்பனியின் பங்குதாரர்களை வேண்டிக்கொள்வது என தீர்மானித்துள்ளனர்.

புதிய கணக்காய்வாளர்களுக்கான வேதனத்தை தீர்மானிப்பதற்கான அதிகாரம் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என பிரேரிக்கும் தீர்மானம் வருடாந்த பொதுக் கூட்டத்தில் முன்வைக்கப்படும்.

மீளாய்வின் கீழ் 2020 மார்ச் 31ந் திகதிக்கு வருடத்திற்கான கம்பனியால் வழங்கப்பட்ட மொத்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 400,000.00 ஆகும். குறித்த வருடத்தில் அமரசேகர மற்றும் கம்பனிக்கு வழங்கப்பட்ட வரி ஆலோசனைக் கட்டணம் ரூபா 218,188/-

கணக்காய்வாளர்கள் கம்பனியோடு அல்லது அதன் துணை நிறுவனங்களோடு அவர்களின் சுந்திரத்தில் பாதிப்புச் செலுத்தும் வகையில் எவ்வித தொடர்பையும் கொண்டிருக்கவில்லை என்பதை பணிப்பாளர்கள் முடிந்தவரை அறிந்துள்ளனர்.

**பணிப்பாளர் சபை சார்பாக**



தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்



பணிப்பாளர்




கம்பனி செயலாளர்கள்

## *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை*

### *தொகுப்பு*

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்றனது. அது பணிப்பாளர் சபைக்கு பொறுப்புச்கூறக்கூடியதாகும். குழுவின் தலைவர் பணிப்பாளர் ஆவார். அவர் பொது திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்கிறார். பணிப்பாளர் சம்பந்தப்பட்ட அமைச்சை பிரதிநிதித்துவம செய்வதோடு ஏனைய நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர். அவ்வாறே கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் ஒரு அதிகாரி சம்பந்தப்பட்ட அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பார்வையாளர்களாக குழுவை பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

### *கூட்டங்கள்*

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2019/20 காலப்பகுதியில் குழுவில் முன்வைக்கப்பட்ட விவகாரங்களை கலந்துரையாட நான்கு தடவைகள் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளது. குழு பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைகளை செய்வதற்காக உள்ளக கணக்காய்வாளரினால் சமர்பிக்கப்பட்ட காலாண்டு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் இருக்கின்ற கட்டுப்பாடுகள் மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்துள்ளது.

### *முடிவுரை*

அறிக்கைகளை ஆழமாக பரிசீலனை செய்ததன் பிற்பாடு கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள், நடவடிக்கை கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக குறித்துக்காட்டப்பட்ட விவகாரங்களை திருத்தியமைப்பதற்காக குழு முகாமைத்துவத்திற்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. மேலும், சில முக்கியமான விடயங்கள் முழுமையாக அவதானம் செலுத்தவும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முகமாக பணிப்பாளர் சபைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளன.

தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
லங்கா போஸ்பெட் லிமிடட்

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. IMU/A/LP/FA/01/2019 உமது இல. திகதி: 24 செப் 2020

தலைவர்,
லங்கா போஸ்பேட் லிமிடட்

**2018 இல. 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12ற்கு அமைவாக 2020 மார்ச் 31உடன் முடிவடைந்த வருடத்திற்கான லங்கா போஸ்பேட் லிமிடட்டின் நிதிக் கூற்றுகள், ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

…………………………………………………………………………………………………

**1. நிதி அறிக்கைகள்**

**1.1 கருத்து**

2020 மார்ச் 31 வரையான நிதி நிலமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்களின் கூற்று, முடிவடைந்த வருடத்திற்கான பணப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள், குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்ளகைகள் உள்ளடங்கலாக 2020 மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான லங்காக போஸ்பெட் லிமிடட் (கம்பனி) இன் நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வு 2018 இல. 19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் உறுப்புரைகளோடு இணைந்து வாசிக்கப்பட்ட இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரிசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) ன் விதப்புரைகளுக்கு அமைவாக எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

எனது கருத்தின் படி, இணைந்த நிதிக் கூற்றுகள் இலங்கையின் கணக்கீட்டு தரங்களுக்கு அமைவாக 2020 மார்ச் 31ல் முடிவடைந்த கம்பனியின் நிதி நிலமை, அதன் நிதி செயலாற்றுகை, நிதிப் பாய்ச்சல்கள் பற்றி உண்மையானதும் பக்கச்சார்பற்றதுமான ஒரு பார்வையை தருகின்றது.

**1.2 கருத்துக்கான அடிப்படை**

இலங்கையின் கணக்காய்வு தரங்களுக்கு (SLAuSs) அமைவாக நான் எனது கணக்காய்வை மேற்கொண்டேன். அந்த தரங்களின் கீழ் எனது பொறுப்புகளாவன எனது அறிக்கையின் நிதி கூற்றுகள் பிரிவின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் குறிப்பிடப்பட்டவையாகும். நான் பெற்றுக்கொண்ட கணக்காய்விற்கான ஆதாரம் எனது கருத்தை வழங்குவதற்கான அடிப்படையாக இருந்தது என நம்புகிறேன்.

1

**1.3. முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் நிதிக் கூற்றுகளை ஆளுகை செய்வதற்கு பொறுப்புச்சாட்டப்பட்டோரும்**

இலங்கையின் கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைவாக உண்மையானதும் பக்கச்சார்பற்றதுமான பார்வையை வழங்கும் நிதிக் கூற்றுகளை தயாரிக்க முகாமைத்துவம் பொறுப்புடையதாகும். ஊழல் அல்லது தவறின் காரணமாக தகவல்களை தவறுதலாக குறிப்பிடுவதிலிருந்து விடுபட்ட நிதி அறிக்கைகளை தயாரிப்பதை இயலுமாக்குவதற்கு முகாமைத்துவம் தீர்மானிக்கும் உள்ளக கட்டுப்பாடு அவசியமானதாகும்.

முகாமைத்துவம் கம்பனியை கலைக்க அல்லது நடவடிக்கைகளை நிறுத்த அல்லது செய்வதை தவிர யதார்த்தமான வேறு மாற்று இல்லை என எண்ணாத வரை நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு, வெளிப்படுத்துதல், பொருத்தமாயின் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையை பயன்படுத்தலோடு தொடர்புபட்ட விடயங்களை தொடர்ந்து மேற்கொள்ள கம்பனியின் இயலுமையை மதிப்பிடும் பொறுப்பு முகாமைத்துவத்தைச் சார்ந்ததாகும்.

ஆளுகை செலுத்த பொறுப்புச் சாட்டப்பட்டோர் கம்பனியின் நிதிக் கூற்று செயன்முறையை மேற்பார்வை செய்ய பொறுப்புடையவர்களாவர்.

**1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்**

எனது நோக்கம் யாதெனில் நிதி அறிக்கைகள் முழுமையாக ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் தகவல்களை தவறுதலாகக் குறிப்படுதல் என்பதிலிருந்து விடுபட்டுள்ளன என்பது பற்றிய நியாயமான உத்தரவாத்தை பெற்றுக்கொள்வதும் எனது கருத்தை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதுமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும். ஆனால் அது இலங்கையின் கணக்காய்வு தரங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வு தகவல்களை தவறாகக் குறிப்பீடுவதை எப்போதும் கண்டறியும் என உத்தரவாதப்படுத்தாது. தவறாகக் குறிப்பிடுதல் ஊழல் அல்லது பிழையின் காரணமாக ஏற்பட முடியும். அது தனிப்பட்ட ரீதியாக அல்லது மொத்தமாக தகவல் சார்ந்தாக கருதப்படும். இந்த நிதிக் கூற்றுகளின் அடிப்படையிலிருந்து பெறப்பட்ட பாவனையாளர்களின் பொருளாதார தீர்மானங்களில் அவை நியாயமாக பாதிப்புச் செலுத்தும் என எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் கணக்காய்வு தரங்களுக்கு அமைவான ஒரு கணக்காய்வின் பகுதியாக, நான் கணக்காய்வின் ஊடாக தொழில்முறை சார்ந்த தீர்ப்பை செயற்படுத்தியிருப்பதோடு தொழில்முறை சார்ந்த ஐயுருவையும் பேணியிருக்கின்றேன். மேலும் நான்

- ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் நிதிக் கூற்றுகளில் தகவலை தவறாகக் குறிப்பிடுவதன் இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டிருக்கின்றேன். அந்த இடர்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு செயன்முறைகளை வடிவமைத்து செயற்படுத்தியுள்ளேன். எனது கருத்துக்கு ஒரு அடிப்படையை வழங்கக்கூடிய போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆதாரத்தை பெற்றுக்கொண்டேன். ஒரு தவறிலிருந்து ஏற்படக்கூடிய தகவலை தவறாகக் குறிப்பிடுவதை விட ஊழல் காரணமாக ஏற்படக்கூடிய தவறாகக் குறிப்பிடுவதை கண்டுபிடிக்காதிருக்கும் இடர் மிகவும் கூடியதாகும். ஊழல் எனபது கூட்டுச்சதி, மோசடி, வேண்டுமென்றே தவிர்த்தல், திரிவுபடுத்தலகள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை புறக்கணித்தல் என்பவற்றோடு சம்பந்தப்படுகிறது.

- சூழ்நிலைகளில் பொருத்தமான ஆனால் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் பாதிப்புத்தன்மை பற்றி கருத்துக்கூறும் நோக்கமில்லாது கணக்காய்வு செயன்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புபட்ட உள்ளக கட்டுப்பாட்டை விளங்கிக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயாத்தன்மை, முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தேன்.

- கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவை முகாமைத்துவம் பயன்படுத்துவதன் பொருத்தப்பாடு, தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடர்ந்து மேற்கொள்வதற்கு கம்பனியின் இயலுமையில் குறிப்பிடத்தக்க ஐயத்தை எதிர்வுகூறக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலமைகளோடு தொடர்புபட்ட தகவல் சார்ந்த நிச்சயமற்றதன்மையாகவும் இருக்க முடியுமான பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையில் முடித்திருக்கின்றேன். தகவல் சார்ந்த நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என்ற நிலையில் நான் முடித்திருந்தால் நிதிக் கூற்றில் அறிக்கைகளோடு சம்பந்தப்பட்ட வெளிப்படுத்தல்கள் பற்றி எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த நான் கேட்டுக்கொள்ளப்படுவேன். அல்லது சில வெளிப்படுத்தல்கள் போதுமற்றவையாக இருந்தால் எனது கருத்தை திருத்திமைக்க நான் கேட்டுக்கொள்ளப்படுவேன். எனது முடிவுகள் கணக்காய்வு அறிக்கையில் இற்றைவரை நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு ஆதாரத்தின் அடிப்படையிலே அமைந்துள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலமைகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் கம்பனி தொடர்ந்து மேற்கொள்வதை நிறுத்த காரணமாகலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுகளின் மொத்த அறிமுகப்படுதல், கட்டமைப்பு, உள்ளடக்கத்தை மதிப்பீடு செய்திருக்கிறேன். பக்கச்சார்பற்ற அறிமுகப்படுத்தலை வழங்கும் வகையில் நிதிக் கூற்றுகள் அடிப்படையாகவுள்ள கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன.

எனது கணக்காய்வின் போது நான் இனங்கண்ட ஏனைய விடயங்களோடு குறிப்பிடத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் சம்பந்தமாக ஆளுகைசெய்ய பொறுப்பானவர்களோடு நான் உரையாடினேன்.

**2. சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறையான தேவைப்பாடுகள் மீதான கூற்று**

2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக விஷேட ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கின்றன.

- எனது விசாரணையிலிருந்து வெளிப்படக்கூடிய மற்றும் 2007 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) (ஈ) பிரிவு மற்றும் 2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவு ஆகியவற்றின் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த முறையான கணக்கீட்டு பதிவுகளிலிருந்தும் கணக்காய்வுக்கு தேவைப்படும் அனைத்து தகவல்கள், விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன்.

- கம்பனியின் நிதிக் கூற்றுகள் 2007 7ம்இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151ம் பிரிவின் தேவைப்பாடுகளோடு இணங்கிச் செல்கின்றன.

- சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் 2018 19ம்இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (ஈ) (iii) இன் தேவைப்பாடுகளுக்கு அமைய முன்னைய வருடத்தோடு உடன்பட்டுச் செல்கின்றன.

- சமர்ப்பிக்கபட்ட நிதிக் கூற்றுகள் 2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய முன்னைய வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகளை உள்ளடக்கியிருக்கின்றது.

மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகள் மற்றும் தகவல்கள் என்ற விடயத்தோடு தொடர்புபட்ட நான் பெற்றுக்கொண்ட ஆதாரத்தின் அடிப்படையில் பின்வரும் விடயங்களில் எதுவும் எனது அவதானத்திற்கு வரவில்லை.

- கம்பனியின் ஆளும் சபையின் எந்தவொரு உறுப்பினரும் 2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய வியாபாரத்தின் சாதாரண விடயங்களுக்கு அப்பால் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு உடன்படிக்கையிலும் நேரடியான அல்லது மறைமுகமான நலனைக் கொண்டிருந்தார் எனக் குறிப்பிடல்.

- கம்பனி 2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எப்) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியின் ஆளும் சபையால் விடுக்கப்பட்ட எந்தவொரு பொருத்தமான எழுததப்பட்ட சட்டம், பொது மற்றும் விஷேட வழிகாட்டல்களையும் பின்பற்றவில்லை எனக் குறிப்பிடுதல்.

- கம்பனி 2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய அதன் அதிகாரங்கள், நடவடிக்கைகள், கடமைகளை செயற்படுத்தவில்லை எனக் குறிப்பிடுதல்.

- கம்பனியின் வளங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் 2018 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக பொருளாதார ரீதயாக வினைதிறனாகவும் தாக்ககரமாகவும் கொள்முதல் செய்யப்படவில்லை, பயன்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடல். ஆனால் பின்வரும் விடயங்கள் தவிர,

(அ) கம்பனி உரத்துக்கான அதிகரித்த கேள்வியை நிறைவேற்றவும் உரத்தை இறக்குமதி செய்வதற்கான செலவைக் குறைக்கவும் ரூபா 34,654,178 செலவில் புதிய நொறுக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்திருந்தது. எவ்வாறாயினும், இயந்திரம் 2016ம் வருடம் முதல் குறைந்த மட்டத்திலே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. 103 வேலை நாட்களே இயந்திரம் செயற்பட்டுள்ளது. மீளாய்வின் கீழ் வருட முடிவில் 15,337 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது.

(ஆ) கம்பனி 2014ம் ஆண்டு புதிய ஆலை இயந்திரமொன்றை பொருத்துவதற்காக 7,440,000 ரூபா செலவில் உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்துள்ளது. எவ்வாறாயினும், இயந்திரம் பொருத்தமான இடத்தில் பொருத்தப்படவில்லை. ரூபா 11,513,434 பெறுமதியான உதிரிப் பாகங்கள் மற்றும் ஆலை தளமும் பயன்படுத்தப்படாமலே இருக்கின்றன. எவ்வாறாயினும், கொள்முதல் செய்வதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனி 2015ம் ஆண்டில் பாதுகாப்பு கமரா முறைமையொன்றை ரூபா 2,885,000 செலவில் பொருத்தியிருந்தது. 2017 முதல் 2020 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் ரூபா 1,165,900 திருத்தங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 31 கமராக்களில் 19 கமராக்காள் தான் செயற்படு நிலையில் காணப்படுகின்றன.

ஒப்பம். தெளிவில்லை
டப்ளியு.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

5

| | குறிப்பு | 2020 மார்ச் 31 | 2019 மார்ச் 31 (மீள குறிப்பிடப்பட்டது) | வேறுபாடு |
|---|---|---|---|---|
| இறைவரி | **17** | 51,003,580 | 530,974,642 | -20,971,062 |
| விற்பனை செலவு | **18** | -321,281,896 | -341,893,724 | 20,611,828 |
| **மொத்த இலாபம்** | | 188,721,684 | 189,080,918 | -359,234 |
| தொழிற்சாலை மற்றும் நிரவாக மேற்செலவுகள் | **19** | -203,476,815 | -189,166,173 | -14,310,642 |
| விற்பனை, விநியோகச் செலவு | **20** | -3,657,774 | -3,940,926 | 283,152 |
| நிதிச் செலவு | **21** | -133,234 | -476,976 | 343,742 |
| **தொழிற்பாட்டிலிருந்து இலாபம** | | -18,546,138 | -4,503,156 | -14,042,983 |
| ஏனைய வருமானம் | **22** | 36,323,614 | 34,197,330 | 2,126,284 |
| **வரி விதிப்புக்கு முன் இலாபம்** | | 17,777,475 | 29,694,174 | -11,916,699 |
| வருமான வரிச் செலவுகள் | **23** | -7,991,253 | 3,691,204 | -11,682,457 |
| **வருடத்திற்கான இலாபம்** | | 9,786,223 | 33,385,378 | -23,599,156 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | | - |
| PPE மீள் மதிப்பீட்டின் இலாபம் | | | 109,916,265 | 109,916,265 |
| PPE மீள் மதிப்பீட்டின் மீதான நிலுவையாகிய வரிப் பொறுப்பு | | 16,313,125 | -30,776,554 | 47,089,679 |
| இளைப்பாறுதல் நன்மை கடப்பாட்டின மீதான நிபுணத்துவ இழப்பு | | -2,981,243 | -1,768,451 | -1,212,792 |
| **வருடத்திற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்** | | 13,331,882 | 77,371,260 | -64,039,378 |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | | 23,118,105 | 109,725,714 | -86,607,610 |
| **பங்கு ஒன்றுக்கான ஆதாயம் (ரூபா)** | **24** | 1.35 | 4.6 | (3.25 |

15 தொடக்கம் 23 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 5 முதல் 14 வரையான பக்கங்களிலுள்ள நிதி கூற்றுகள் இந்த நிதிக் கூற்றுகளின் இணைந்த பகுதியாகும்.

**லங்கா போஸ்பேட் லிமிடட்**
**2020 மார்ச் 31ல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி கூற்றுக்கான குறிப்புகள்**

*(இலங்கையின் ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டது)*

| | குறிப்பு | 2020 மார்ச் 31ற்கு | 2019 மார்ச் 31ற்கு | வேறுபாடு |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | |
| | **5** | | | - |
| சொத்து, ஆலை மற்றும் சாதனம் | | 337,311,234 | 369,490,485 | 32,179,252 |
| சமபங்கில் முதலீடு (GSMB தொழிநுட்ப சேவைகள் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் | **6** | 1,000,000 | 1,000,000 | |
| | | **338,311,234** | **370,490,485** | **32,179,252** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | |
| கையிருப்புகள் | **7** | 104,269,949 | 105,136,724 | -866,775 |
| வர்த்த பெறப்பட வேண்டியவைகள் | **8** | 35,169,168 | 35,197,674 | -28,507 |
| வைப்புகள், முன் பணம் செலுத்தல்கள் மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவைகள் | **9** | 55,341,054 | 60,271,050 | -4,929,996 |
| வருமான வரி பெறப்பட வேண்டியவை | **10** | 9,518,192 | 3,878,771 | 5,639,421 |
| நிலையான வைப்புகள் மற்றும் திறைசேரி பட்டியல்கள் | **11** | 336,447,850 | 270,119,792 | 66,328,058 |
| காசு மற்றும் காசு சமபெறுமதிகள் | **12** | 25,977,564 | 47,508,725 | -<br>21,531,161 |
| | | **566,723,776** | **522,112,735** | **44,611,041** |
| **மொத்த சொத்துகக்ள்** | | **905,035,010** | **892,603,221** | **12,431,789** |
| **மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| **மூலதனம் மற்றும் கையிருப்புகள்** | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | **13** | 72,510,000 | 72,510,000 | |
| மீள் மதிப்பீடு கையிருப்புகள் | | 95,452,836 | 79,139,711 | 16,313,125 |
| வைத்திருக்கும் இலாபங்கள் | | 619,801,744 | 619,996,764 | -195,020 |
| **மொத்த மூலதனம்** | | **787,764,580** | **771,646,475** | **16,118,105** |
| நடைமுறையல்லா பொறுப்புகள் | | | | |
| இளைப்பாறும் நன்மை கடப்பாடு | **14** | 43,937,440 | 40,070,517 | 3,866,923 |
| நிலுவையாகவுள்ள வரி பொறுப்பு | **15** | 34,358,741 | 36,133,599 | -1,774,858 |
| | | **78,296,181** | **76,204,116** | **2,092,065** |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | | |
| வர்த்தக செலுத்த வேண்டியவைகள் | | 3,473,639 | 9,860,871 | -6,387,232 |
| வருமான வரி செலுத்த வேண்டியவை | 10 | | 4,741,904 | -4,741,904 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகளும் குவிக்கப்பட்ட செலவுகளும் | 16 | 35,500,610 | 30,149,856 | 5,350,754 |
| | | **38,974,249** | **44,752,632** | **-5,778,383** |
| **மொத்த முதலீடு மற்றும் பொறுப்புகள்** | | **905,035,010** | **892,603,222** | **12,431,787** |

கம்பனியின் நிதிக் கூற்று 2007 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளோடு இணங்கிச் செல்கின்றது.

ஒப்பம். தெளிவில்லை
நிதி முகாமையாளர்

ஒப்பம். தெளிவில்லை
பொது முகாமையாளர்

15 தொடக்கம் 23 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 5 முதல் 14 வரையான பக்கங்களிலுள்ள நிதி கூற்றுகள் இந்த நிதிக் கூற்றுகளின் இணைந்த பகுதியாகும்.

இந்த நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

**இந்த நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டதாகும்.**

ஒப்பம். தெளிவில்லை
தலைவர்

2020 ஜீலை 9

கொழும்பு

ஒப்பம். தெளிவில்லை
பணிப்பாளர்

2020 ஜுலை 9

கொழும்பு

**லங்கா போஸ்பேட் லிமிடட்**

**2020 மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மையில் மாற்றத்தின் கூற்று**

*(இலங்கையின் ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டது)*

| | குறிப்பிட்ட மூலதனம் | மீள மதிப்பீடு செய்தல் கையிருப்பு | (மீளப்பெற்ற ஆதாயம்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2018 ஏப்ரல் 1ற்கு மதி (ஏளவே அறிக்கையிடப்பட்டது)** | 72,510,000 | | 597,323,858 | 669,833,858 |
| ஊழியர் கடனுக்கான கணக்கீட்டு கொள்கையில் மாற்றங்களை சரிபடுத்தல் | | | -3,944,021 | -3,944,021 |
| 2018 ஏப்ரல் 1ற்கு மீதி (மீள குறிப்பிடப்பட்டது) | 72,510,000 | | 593,379,837 | 665,889,837 |
| வருடத்திற்கான இலாபம் (மீள குறிப்பிடப்பட்டது) | | | 33,385,378 | 33,385,378 |
| PPE ன் மீள் மதிப்பீட்டிலிருந்து உருவாகும் இலாபம் | | 109,916,265 | | 109,916,265 |
| PPEன் மீள் மதிப்பீட்டின் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு | | -30,776,554 | | -30,776,554 |
| இளைப்பாறுதல் நன்மை கடப்பாடு மீதான நிபுணத்துவ நட்டம் | | | 1768451 | 1,768,451 |
| வருடத்தில் செலுத்தப்பட்ட இலாப பங்கு | | | -5,000,000 | -5,000,000 |
| **2019 மார்ச் 31ற்கு மீதி** | **72,510,000** | **79,139,711** | **619,996,764** | **771,646,475** |
| **2019 ஏப்ரல் 1ற்கு மீதி** | **72,510,000** | **79,139,711** | **619,996,764** | **771,646,475** |
| காலப்பகுதிக்கான இலாபம் | | | 9,786,223 | 9,786,223 |
| PPE ன் மீள் மதிப்பீட்டின் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்பு | | 16,313,125 | | 16,313,125 |
| இளைப்பாறுதல் நன்மை கடப்பாடு மீதான நிபுணத்துவ நட்டம் | | | -2,981,243 | -2,981,243 |
| காலப்பகுதியில் செலுத்தப்பட்ட இலாப பங்கு | | | -7,000,000 | -7,000,000 |
| **2020 மார்ச் 31ற்கு மீதி** | **72,510,000** | **95,452,836** | **619,801,744** | **787,764,580** |

15-23 வரையான பக்கங்கள் கணக்கீட்டுக் கொள்கைகளும் 5-14 வரையான பக்கங்கள் நிதி கூற்றுக்களுக்கான குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுகளின் இணைந்த பகுதியாகும்.

**ல்ங்கா போஸ்பேட் லிமிடட்**

**2020 மார்ச் 31ல் முடிவடைந்த காலப்பகுதிக்கான காசு பாய்ச்சல் கூற்று**

| | (இலங்கை ரூபாவில் வெளிப்படுத்தப்பட்டது) | |
|---|---|---|
| | *2020 மார்ச் 31* | *2019 மார்ச் 31* |
| **நடவடிக்கைகளை தொழிற்படுத்துவதிலிருந்து காசு பாய்ச்சல்** | | |
| வரி விதிப்பதற்கு முன் இலாபம் | 17,777,475 | 28,663,251 |
| **சரிபடுத்தல்கள்** | | |
| தேய்மானம் | 34,256,995 | 40,387,668 |
| இளைப்பாறும் நன்மை கடப்பாடுகள் | 7,407,304 | 6,668,795 |
| வட்டி வருமானம் | -35,579,877 | -31,570,392 |
| பங்கு இலாப வருமானம் | -419,000 | -1,000,000 |
| **செயற்படும் மூலதன மாற்றங்களுக்கு முன் இலாபத்தை தொழிற்படுத்தல்** | **23,442,898** | **43,149,321** |
| **செயற்படும் மூலதன மாற்றங்கள்** | | |
| கையிருப்புகள் | 866,775 | 2,636,829 |
| வர்த்தக பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவைகள் | 28,507 | -15,979,340 |
| வைப்புகள், முன்கட்டணம் செலுததல், ஏனைய பெறக்கூடியவைகள் | 4,929,996 | 782,245 |
| வர்த்தக செலுத்த வேண்டியவைகள் | -6,387,232 | -1,532,698 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகளும் அட்டுறு செலவுகளும் | 5,350,754 | 4,794,846 |
| சேதத்திற்கான ஏற்பாடு | 2,302,687 | 2,302,687 |
| **நடவடிக்கைகளிலிருந்து பெறபபட்ட காசு** | **30,534,385** | **36,153,889** |
| வருமான வரி/ ESC/ WHT செலுத்தப்பட்டது | -18,372,578 | -4,012,242 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி விதிப்பு | 14,538,267 | |
| இளைப்பாறுதல் நன்மை கடப்பாட்டின் பணம் செலுத்தல் | -6,521,624 | -5,433,106 |
| **செயற்பாடுகளை தொழிற்படுத்துவதிலிருந்து தேறிய காசு பாய்ச்சல்** | **20,178,450** | **26,708,541** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்து, ஆலை, சாதனம் கொள்வனவு செய்தல் | -4,380,431 | -7,146,545 |
| மூலதன நடைமுறை வேலை | | -73,258 |
| பெறப்பட்ட வட்டி | 35,579,877 | 31,570,392 |
| குறுகிய கால வைப்பு அதிகரிப்பு | -66,328,058 | -33,380,933 |
| பெறப்பட்ட பங்கு இலாபம் | 419,000 | 1,000,000 |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | **-34,709,612** | **-8,030,344** |
| நிதியளித்தல் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல் | | |
| செலுத்தப்பட்ட பங்கு இலாபம் | -7,000,000 | -5,000,000 |
| **நிதியளித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **-7,000,000** | **-5,000,000** |
| **வருடத்தில் காசு, காசுக்கு சமமானவைகளின் தேறிய மாற்றங்கள்** | **-21,531,161** | **13,678,197** |
| வருட ஆரம்பத்தில் காசு, காசுக்கு சமமானவைகள் | 47,508,725 | 33,830,528 |
| **வருட முடிவில் காசு, காசுக்கு சமமானவைகள் (குறிப்பு 8)** | **25,977,564** | **47,508,725** |
| | | |
| ***வருட முடிவில் காசு, காசுக்கு சமமானவைகள் பின்வருமாறு*** | ***2020 மார்ச் 31*** | ***2019 மார்ச் 31*** |
| நிலையான வைப்பு மற்றும் திறைசேரி பட்டியல் | | |
| கையிலுளள மற்றும் வங்கியிலுள்ள காசு | 25,977,564 | 47,508,725 |
| | **25,977,564** | **47,508,725** |

15-23 வரையான பக்கங்கள் கணக்கீட்டுக் கொள்கைகளும் 5-14 வரையான பக்கங்கள் நிதி அறிக்கைக்கான குறிப்புகளும் இந்த நிதி கூற்றுகளின் இணைந்த பகுதியாகும்.

## 1. *பெருநிறுவன தகவல்கள்*

### 1.1 உறைவிடம் மற்றும் சட்ட அமைப்பு

லங்கா போஸ்பேட் லிமிடட் (“கம்பனி”) 200ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். 1987ம் ஆண்டு 23ம் இலக்க சட்டத்திற்கு அமைவாக, அரச அகழ்வு மற்றும் கனிமப் பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் எப்பாவல போஸ்பேட் திட்டம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாக மாற்றப்பட்டது.

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயம் கொழும்பு 14, புதிய களனி பாலம் வீதி, இல. 73 1/1, என்ற முகவரியில் அமைந்துள்ளது. கற்பாரை போஸ்பேட் (பொதுவான கனிமத் தொகுதி) வைப்பு எப்பாவலவில் அமைந்துள்ளது.

### 1.2 பிதான செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் இயல்புத்தன்மையும்

கம்பனியின் பிரதான செயற்பாடுகளாவன நிரந்தரமான விவசாய பயிர்களுக்கு உரமாக பயன்படுத்தப்படும் ரொக் போஸ்பேட்டினை அகழ்தல், செயற்படுத்தல் மற்றும் விற்பனை செய்வதாகும். மேலும், உரத்தினை கலவை செய்யும் நடவடிக்கையை கம்பனி 2014ம் ஆண்டு வாரியபொல, கனத்தேவெவ என்ற இடத்தில் ஆரம்பித்தது.

### 1.3 அறிக்கையிடும் காலப்பகுதி

நிதிக் கூற்று மூலம் உள்ளடக்கப்படும் காலப்பகுதி 2019.04.01 இருந்து 2020.03.31 வரையாகும்.

### 1.4 வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கும் திகதி

2020 மார்ச் 31ந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் நகல் நிதிக் கூற்றுகள் பணிப்பாளர் சபையினால் கணக்காய்வாளர்களுக்கு வெளியிட 2020 ஜுலை 9ந் திகதி அதிகாரமளிக்கபட்டடிருந்தன.

## 2. 0 தயாரித்தலுக்கான அடிப்படை

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

கம்பனியின் நிதிக் கூற்றுகள் (நிதி நிலமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்களின் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளின் சாரம்சத்துடன் பணப் பாய்ச்சல் கூற்று) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீட்டுத் தரங்கள் மற்றும் 2007ன் 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலமை பற்றிய கூற்றில் பின்வரும் பொருள்சார்ந்த விடயங்கள் தவிர்த்து நிதி அறிக்கைகள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ள்ளன.

- விற்பனைக்குள்ள நிதிச் சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.
- வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதி என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- கம்பனிக்கு வருமானத்தை ஈட்டித்தருவதற்கு பயன்படுத்தப்படும் போஸ்பேட் வைப்பு சொத்துக்களின் பெறுமதி நம்பகமான முறையில் அளவிடப்படாத வரை நிதி அறிக்கைகளில் சொத்தாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### 2.3 செயற்பாட்டு ரீதியான மற்றும் தற்போதைய நாணயம்

நிதிக் கூற்றுகள் இலங்கையின் ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன. அது கம்பனியின் செயற்பாட்டு ரீதியான மற்றும் தற்போதைய நாணயமாகும். இலங்கையின் ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து நிதி தொடர்பான தகவல்களும் அண்மைய ரூபாவிற்கு மட்டம்தட்டப்பட்டுள்ளன.

### 2.4 ஓப்பீட்டுத் தகவல்

கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்கீட்டு நியமம் 01- (நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்) இற்கு அமைவாக முன்னைய நிதி ஆண்டின் கொள்கைகளோடு கம்பனியினால் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படுகின்றன.

### 2.5 பொருள்மயப்படுத்தலும் திரட்டலும்

நிதிக் கூற்றுகளை சமர்ப்பிக்கும் போது கணக்கீட்டு நியமம் 01 ற்கு இணைவாக, ஒத்த விடயப்பொருளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் நிதிக் கூற்றுகளில் வேறாக சமர்ப்பிக்கப்படுகின்றது. வெவ்வேறு தன்மைகொண்ட விடயப்பொருட்கள் அல்லது செயற்பாடுகள் அவை பொருட்களாக இருக்குமாயின் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையை ஈடுசெய்வதற்கான சட்டரீதியாக அமுல்படுத்தப்படும் உரிமை இருக்குமாயின் மற்றும் தேறிய அடிப்படையில் முடித்துவைக்க அல்லது சொத்துக்களை அறிந்துகொண்டு ஏக காலத்தில் பொறுப்பை முடித்துவைப்பதற்கான எண்ணம் இருக்குமாயின் நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தேறிய தொகையிலிருந்து ஈடுசெய்யப்படுகின்றன. வருமானமும் செலவுகளும் ஏதாவது கணக்கீட்டு நியமங்கள் அல்லது வியாக்கியானத்தின் மூலம் வேண்டப்படாத அல்லது அனுமதியளிக்கப்படாத வரை விரிவான வருமான அறிக்கையில் ஈடுசெய்ய முடியாதவையாகும்.

## 3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதி அறிக்கையை தயாரிக்கும் போது எதிர்காலத்துடன் தொடர்புபட்டவாறு குறிப்பிட்ட முக்கியமான கணக்கீட்டு அனுமானங்களை பிரயோகிப்பதை வேண்டிநிற்கின்றது. மேலும், அறிக்கையிடும் காலப்பகுதி முடிவில் அறிக்கையிடப்பட்ட வருமானத் தொகை, செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் எதேச்சையான பொறுப்புகளை வெளிப்படுத்தல்களில் பாதிப்புச் செலுத்தும் தீர்ப்புகள், மதிப்பீடுகள், அனுமானங்களை வழங்குமாறு கம்பனியின் முகாமைத்துவத்தை வேண்டுகிறது. எவ்வாறாயினும், இந்த அனுமானங்கள், மதப்பீடுகளின் நிச்சயமற்றதன்மை எதிர்காலத்தில் சொத்துகளின் அல்லது பொறுப்பின் சுமந்து செல்லும் தொகையில் பொருள்சார்ந்த சரிபடுத்தல்களை வேண்டிநிற்கும் வெளியீடுகளில் விளைவினை ஏற்படுத்த முடியும். ஆகவே, உண்மையான அனுபவம் மற்றும் பெருபேறுகள் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையில், முகாமைத்துவம் நிதி அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளில் அதிகளவு குறிப்பிடத்தக்க பாதிப்பை கொண்டிருக்கும் பின்வரும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை ஏற்படுத்தியுள்ளது.

a) **வரி விதித்தல்**

கம்பனி வருமான வரிகள் மற்றும் ஏனைய வரிகளுக்கு உட்பட்டிருக்கின்றது. குறிப்பிடத்தக்க தீர்ப்பு தற்போதைய, ஒத்திவைக்கப்பட்ட, நிதி அறிக்கையில் SLFRS ஐ மேற்கொள்வதை கையாள்வதற்கான வரி வழிகாட்டல்கள் விவகாரத்தை நிலுவையில் வைத்திருக்கும் ஏனைய வரிகள் மற்றும் வரிகளை விதித்தல் எனும் நோக்கத்திற்காக வரி விதிக்க முடியுமான இலாபத்தின் மொத்த வழங்கலை தீர்மானிக்க வேண்டப்பட்டுள்ளது. இந்த நிதி அறிக்கையை தயாரிக்கும் காலப்பகுதியில் வரிச் சட்டங்ககிள் பொருத்தப்பாட்டை வியாக்கியானம் செய்தல் தொடர்பாக நிச்சயமற்ற நிலமைகளும் காணப்படுகின்றன..

மேலதிக வரிகள் நிலுவையில் இருக்கும் என்ற வகையில் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட தற்போதைய, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் பிற வரிகளுக்கான சொத்துக்கள், பொறுப்புகளை கம்பனி ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த விவகாரங்களின் இறுதி வரி வருமானம் ஆரம்பமாக அறிக்கையிடப்பட்ட தொகையிலிருந்து எங்கு வேறுபடுகின்றதோ, அவ்வாறான வேறுபாடுகள் தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வருமானம், ஒத்திவைக்கப்பட்ட வரி தொகைகளில் பாதிப்புச் செலுத்துகின்றன.

**b) சொத்து மற்றும் சாதனங்களின் பயன்மிக்க ஆயுட்காலம்**

கம்பனி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதிக்கும் எஞ்சிய பெறுமானங்கள், சொத்துக்கள் தேய்மானத்தின் பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் முறைமைகள் குறித்து மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவத்தின் தீர்ப்பு இந்த பெறுமானங்கள், விகிதங்கள், முறைமைகளை மதிப்பீடு செய்கின்றது. ஆகையால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுகின்றன.

c) **தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கரு**

பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கருவை தொடர்வதற்கான கம்பனியின் இயலுமையை மதிப்பீடு செய்துள்ளனர். எதிர்காலத்திற்காக வியாபாரத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கான வளங்களை கம்பனி கொண்டிருக்கின்றது என்பதில் திருப்திகொள்கின்றனர். மேலும், தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கருவை தொடர்வதற்கான கம்பனியின் இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை எதிர்வுகூறக்கூடிய பொருள்சார்ந்த நிச்சயமற்ற தன்மை தொடர்பில் பணிப்பாளர் சபை அறிந்திருக்கவில்லை. கம்பனியின் நடவடிக்கைகளை கலைத்துவிடுதல் அல்லது நிறுத்திவிடுவது பற்றி அவர்கள் எண்ணம் கொள்ளவில்லை. ஆகையால், நிதி அறிக்கைகள் தொடர்ந்து செல்வதற்கான எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றது.

**d) பிந்திய இருப்பு நிலைக்குறிப்பு நிகழ்வுகள்**

2020 மார்ச் 31ந் திகதிக்கு கம்பனியின் பெருபேறுகளில் குறிப்பிடத்தக்க பாதிப்பைச் செலுத்துமளவுக்கு எவ்வித பிந்திய இருப்பு நிலைக்குறிப்பு நிகழ்வும் குறிப்பிடப்படவில்லை.

**e) நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு**

புறவயமான ஏதாவது ஆதாரம் காணப்படுகின்றது அல்லது விரிவான வருமான அறிக்கையில் சேத இழப்பு அறிக்கையிடப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் கம்பனி மதிப்பீடு செய்கின்றது.

**f) முதலீட்டு விற்பனைக்காகவுள்ளவற்றின் சேதம்**

சேதங்கள் உள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்திலும் முதலீட்டு விற்பனைக்காகவுள்ள பங்கு நம்பிக்கை வகைப்படுத்தலுக்கு வழங்கப்பட்ட கடன் குறித்து கம்பனி மீளாய்வு செய்யும். கடன்கள் மற்றும் முற்பணங்களின் தனிப்பட்ட மதிப்பீடுகளில் பிரயோகிக்கப்படும் ஒத்த தீர்ப்பினை வேண்டிநிற்கின்றது.

## g) ஓத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்கள்

வரிக்குரிய இலாபங்கள் பயன்படுத்த முடியுமாகவுள்ள இந்த நஷ்டங்கள்/ கடன்களுக்கு எதிராக இருக்கும் என்பது சாத்தியமாக நிகழக்கூடியது என்ற அளவில் ஓத்திவைக்கபட்ட வரி சொத்துக்கள் அனைத்து விலக்களிக்க முடியுமான தற்காலிக வேறுபாடுகள், பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் மற்றும் வரிக் கடன்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. எதிர்கால வரி திட்டமிடல் உபாயங்களோடு எதிர்கால வரிக்குரிய இலாபங்களின் சாத்தியமான நேர ஒதுக்கீடு மற்றும் மட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியுமான ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்களின் தொகையை தீர்மானிக்க குறிப்பிடத்தக்க முகாமைத்துவ தீர்ப்பு வேண்டப்படுகிறது.

## h) வரையறுக்கப்பட்ட இலாப திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட இலாப திட்டங்களின் சுமந்து செல்லும் பெறுமானமானது நிபுணத்துவ அனுமானத்தைக் கருத்திற்கொள்ளும் ஒரு சூத்திரத்தை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. இது எதிர்காலத்தில் உண்மையான அபிவிருத்திகளிலிருந்து வேறுபடும் பல்வேறுபட்ட அனுமானங்களை மேற்கொள்வதோடு சம்பந்தப்படுகிறது. இவை கழிவு விகிதங்களை தீர்மானித்தல், எதிர்கால சம்பள அதிகரிப்பு, தொழிலாளர் புறழ்வு விகிதங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மதிப்பீடு செய்வதன் சிக்கல்தன்மை, உள்ளார்ந்த அனுமானங்கள், அவற்றின் நீண்ட கால இயல்புத்தன்மை காரணமாக வரையறுக்கப்பட்ட இலாப கடப்பாடு இந்த அனுமானங்களில் மாற்றத்திற்கு மிகவும் முக்கியமானதாகும். ஆனைத்து அனுமானங்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பொருத்தமான கழிவு விகிதங்களை தீர்மானிக்கும் போது, வரையறுக்கப்பட்ட இலாப கடப்பாட்டின் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியுடன் பொருந்திச்செல்லும் பொதுமைப்படுத்தப்பட்ட முதிர்வு இலங்கை அரசாங்கத்தின் அறுவடையை முகாமைத்துவம் கருத்திற்கொள்கிறது. எதிர்கால சம்பள அதிகரிப்புகள் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க விகிதங்கள் மற்றும் கம்பனியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதத்தை அடிப்படையாக கொண்டுள்ளன.

## 4. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சாரம்சம்

நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது கம்பனியால் பிரயோகிக்கப்படும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கின்றன. கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதி அறிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலப்பகுதிக்கும் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

## 4.1 இறைவரி ஏற்றுக்கொள்ளல்

### 4.1.1 பொருட்களின் விற்பனை

பொருளாதார நன்மைகள் கம்பனியை நோக்கி பாயும், ஏற்பட்ட அல்லது ஏற்படவுள்ள இறைவரியும் இணைந்த செலவுகளும் நம்பகமாக மதிப்பிட முடியுமானது என்பது சாத்தியமானது என்ற அளவில் இறைவரி அங்கீகரிக்கப்படுகின்றது. இறைவரியானது வர்த்தகக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகளின் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறமுடியுமான நிகர பணத்தொகையின் நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது.

பொருட்கள் விற்பனை மூலம் கிடைக்கும் இறைவரி பின்வரும் நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படும் நிலையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

a) கம்பனி பொருளின் உடமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் நன்மைகளை விற்பனையாளருக்கு மாற்றிவிட்டது.

b) வழமையாக உடமைத்துவத்துடன் இணைந்த அளவுக்கு முகாமைத்துவம்சார் சம்பந்தப்படுதலை தொடர்ந்து பேணவோ அல்லது விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மீது பாதிப்பான கட்டுப்பாட்டை செலுத்தாமலோ கம்பனி தொடர்ந்து வைத்திருத்தல்.

c) இறைவரியின் தொகை நம்பகமான முறையில் மதிப்பிட முடியுமானது. கொடுக்கல் வாங்கலோடு இணைந்த பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாயும் என்பது சாத்தியமானதாகும்.

